| | |
|---|---|
| விடுநர் | பெறுநர் |
| பி.பெரியசாமி.எம்.எஸ்சி.(விவ)., | அனைத்து வட்டார வளர்ச்சி அலுவர்கள்(வ.ஊ), |
| திட்ட இயக்குனர் | வேலூர் மாவட்டம். |
| மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, | |
| வேலூர்-9. | |

ந.க.அ5/4464/2015 நாள்:06.12.2018

அய்யா,

பொருள் : சுகாதாரம் - வேலூர் மாவட்டம் - பள்ளிக்கழிப்பறைகள் பராமரிப்பு - பள்ளிகளில் பணிபுரியும் சுகாதார பணியாளர்களுக்கு ஊதியம் டிசம்பர் 2018-ம் மாதம் வரை விடுவித்து உத்திரவிடப்பட்டது – கிராம வறுமை ஒழிப்பு சங்கம்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு/வெளி நிறுவனங்கள் (out sourcing ) மூலம் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் சுகாதார பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்ட விவரத்தினை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பக்கோருதல் - தொடர்பாக.

பார்வை :
1. சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிதுறை இயக்குநர் அவர்களின் நேர்முக கடித எண்:60354/2015/ SBM(G) -3 நாள்:04.07.2018.
2. அரசாணை(நிலை) எண்:161 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (CGS-1) நாள்:12.11.2018
3. சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் அவர்களின் செயல் முறை கடித எண்:60354/2015/SBM(G)-3 நாள்:21.11.2018.
4. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல் முறை கடித ந.க.அ5/4464/2015. நாள்:28.11.2018.

******************

பார்வை 1 மற்றும் 2-ல் காணும் அரசாணையின்படி வேலூர் மாவட்டம் 20 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலுள்ள ஒன்றிய தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், மற்றும் கிராம ஊராட்சிகளின் எல்லைக்குட்பட்ட அரசு உயர் நிலைப்பள்ளிகள், அரசு மேல் நிலைப்பள்ளிகள், ஆதிதிராவிட நலப்பள்ளிகள் மற்றும் வனத்துறை பள்ளிகளிலுள்ள கழிப்பறைகளை பராமரித்தல் பணிக்கு வெளி நிறுவனங்கள் மூலம் துப்புரவு பணியாளர்கள் நியமிப்பது குறித்து அவர்களுக்கு ஊதியம் வழங்குவது குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடாந்து பார்வை 3-ல் காணும் சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் பள்ளிகளில் பணிபுரியும் சுகாதார பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் பராமரிப்பு செலவினங்களுக்காக நிதி ஒதுக்கீடு அளித்து உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து பார்வை 4-ல் காணும் செயல்முறைகளின்படி ஆகஸ்ட் 2018-ம் மாதம் முதல் டிசம்பர் 2018-ம் மாதம் வரை சுகாதார பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் பராமரிப்பு செலவினங்களுக்கான தொகை விடுவிக்கப்பட்டது.

தற்போது ஊராட்சி ஒன்றியங்களுக்கு விடுவிக்கப்பட்ட தொகையிலிருந்து சம்மந்தப்பட்ட கிராம வறுமை ஒழிப்பு சங்கம்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு வெளிநிறுவனங்கள் (out Sourcing) மூலம் நியமனம் செய்யப்பட்ட **சுகாதார பணியாளர்களின் வங்கி கணக்கிற்கு ECS முறையில் பிரதி மாதம் 10-ம் தேதிக்குள் ஊதியம் வழங்கப்படவேண்டும்** என்றும் இதற்காக பள்ளிகழிப்பறைகள் பராமரிப்பு திட்ட கணக்கிலிருந்து ஒவ்வொரு மாதமும் 5-ம் தேதிக்குள் அவர்களின் வருகை பதிவேட்டின்படி சம்மந்தப்பட்ட அமைப்பிற்கு அதாவது கிராம வறுமை ஒழிப்பு சங்கம்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் வங்கி கணக்கிற்கு சம்மந்தப்பட்ட தலைமை ஆசிரியரால் விடுவிக்கப்படவேண்டும் என இதன் மூலம் வலியுறுத்தி தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சுகாதார பணியாளர்களுக்கு பிரதி மாதம் தோறும் ஊதியம் வழங்கப்பட்ட விவரத்தினை இணைக்கப்பட்ட படிவத்தில் கோரியவாறு பூர்த்தி செய்து பிரதி மாதம் 10-ம் தேதிக்குள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்(வஊ)-களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**"இது மிகவும் அவசரம்"**

**இணைப்பு:**

படிவம்

ஒம்/பெ.பெரியசாமி,
திட்ட இயக்குநர்.

/உத்தரவுபடி/

உதவி திட்ட அலுவலர்(வீ(ம)சு

**நகல்:**

1. மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் வேலூர் மாவட்டம் 06.12.18.
2. மாவட்ட கல்வி அலுவலர் வேலூர்/திருப்பத்தூர், வாணியம்பாடி, இராணிப்பேட்டை மற்றும் அரக்கோணம்.

## Maintanance of School Toilets

**Panchayat wise Details of Payment Made to Sanitary workers through VPRC/PLF - for the Month of ________________2018**

**Name of the Block:**

| Sl.No | Name of the Panchayat | Name of the School | No. of Sanitary workers Engaged through VPRC/PLF | Fund Received from DRDA | | Fund Released to School | | Fund Released to VPRC /PLF | | Fund Released to Sanitary worker by VPRC /PLF | | Reason for Delay |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Date | Amount | Date | Amount | Date | Amount | Date | Amount | |
| 1 | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | | | |
| 6 | | | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | | | |
| 8 | | | | | | | | | | | | |
| 9 | | | | | | | | | | | | |
| 10 | | | | | | | | | | | | |
| Total | | | | | | | | | | | | |

Block Development Officer,(BP)
________________Block